5ம் தர புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை - 2021

மேல் மாகாண கல்வித்திணைக்கள ஆரம்பப்பிரிவின் சிங்கள மொழிமூல வெளியீட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு


வினாத்தாள் இல - 01

பத்திரம் - I


எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

- **இல 1 முதல் இல 40 வரையான வினாக்களிற்கு தரப்பட்டுள்ள விடைகள் மூன்றினுள் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**


1. 1 மற்றும் இரண்டாம் வினாக்களிற்கு பொருத்தமற்ற உருவின் கீழ் கோடிடுக.



1)



2)



3)


2.



1)



2)



3)

3. கீழே தரப்பட்டுள்ள எண்களில், எண்கோலத்தினை உருவாக்குவதற்கு நீக்கப்பட வேண்டிய எண் சோடி யாது?

25 28 31 37 43 46 49 55

1) 25, 43 2) 37, 46 3) 28, 46

4. இரண்டு பகுதியிலும் சமமான நிரையினைத் (வரிசை) தெரிவு செய்க.

1) S Ƨ V Λ W 6831 = S Ƨ V A W 6831

2) S Ƨ V Λ W 6381 = S Ƨ V Λ W 6381

3) S Ƨ V A ꟽ 6381 S Ƨ V Λ W 6381

www.lkedu.lk

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
KNOWLEDGE IS POWER

ZOOM
வகுப்புக்கள்

Grade 2 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி


Call: 76667 4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

5. அடுத்ததாக வரவேண்டிய உருவத்தை தெரிவு செய்க.





1) 2) 3)

6. ஒரு பாடல் வரிமாறி எழுதப்பட்டுள்ளது. அதை ஒழுங்குபடுத்தி எழுதும்போது வரும் ஆங்கில எழுத்து ஒழுங்கு முறை

A - விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! - அதை


B - தலைசீவிப் பள்ளிக்கேடு ஓடு - நல்

C - விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

D - தங்கப் பதுமையாம் தோழர்களோடு!

1) ACDB 2) BDAC 3) CDAB

7. உணவு, மரக்கறி, பழங்கள், கரட் முதலியவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பினை காட்டுவதற்காக கீழேயுள்ள உரு வரையப்பட்டுள்ளது. இங்கு D எழுத்தின் மூலம் காட்டப்படுவது



1) கரட்

2) மரக்கறி


3) பழங்கள்

8. சமன், புகைப்படத்தினைக் காட்டி, இந்தப் புகைப் படத்திலே இருப்பவர் என்னுடைய தந்தையின் ஒரேயொரு புதல்வன் (ஏகபுதல்வன்) ஆவார் எனக் கூறினான் எனின், புகைப்படத்தில் இருப்பவர்

1) சமனின் தந்தை 2) சமனின் தம்பி 3) சமன்

www.lkedu.lk

9. கேள்விக்குறி (?) அடையாளமிடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய விடையாவது?



1) 36 2) 60 3) 56

10. அமரா, தமரா மற்றும் கமலா என்னும் மூவரும் பாடசாலைக்கு செல்வதற்காக புறப்பட்ட நேரம் மு.ப 6.30 ஆகும். அவர்கள் பாடசாலையைச் சென்றடைந்த நேரம் முறையே கீழ்க்குறிப் பிட்டவாறாகும். இரண்டாவதாக பாடசாலைக்கு சென்றடைந்தவர் யார்?



1) கமலா 2) அமரா 3) தமரா

11. கம்பியால் அடைக்கப்பட்டுள்ள கூடு ஒன்றில் உள்ள குருவிகளின் சொண்டு மற்றும் கால்களின் முழு எண்ணிக்கை 51 ஆகும். எனின் அடைக்கப்பட்டுள்ள குருவிகளின் எண்ணிக்கை யாது?

1) 17 2) 16 3) 21

12. இக் கனவுருவின் பல்வேறு கோணங்களின் பிரகாரம் 6ம் இலக்கத்திற்கு நேர் எதிராக உள்ள பக்கத்திலுள்ள எண் யாது?



1) 3
2) 1
3) 4

13. கமல் அருணை விட உயரமானவன். துஷார கமலை விட உயரமானவன் நிமல் கமலை விட உயரம் குறைந்தாலும் அருணை விட உயரமானவன் இந்த நால்வருள் மிக உயரமானவன் யார்?

1) கமல் 2) துஷார 3) நிமல்

www.ikedu.lk


14. மேற்குறிப்பிட்ட நபர்களை குறைந்த உயரத்திலிருந்து கூடிய உயரம் வரை ஒழுங்குபடுத்தும் போது காணப்படடம் ஒழுங்கு ஆவது?

1) துஷார, கமல், நிமல், அருண்

2) அருண், கமல், துஷார, நிமல்

3) அருண், நிமல், கமல், துஷார

15. கீழேயுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.



விற்பனை நிலையத்தில் இருந்த கொய்யாக் காய்களின் எண்ணிக்கை 9 எனின், அங்கு இருந்த அப்பிள்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 54 2) 72 3) 36

16. விற்பனை நிலையத்திலே காணப்பட்ட முழுப் பழங்களின் தொகை யாது?

1) 120 2) 244 3) 144

- மனதில் காற்றலைகள் பறக்கின்றன. குருவிகளின் ஒலிகள் கிராமத்தை தாலாட்டுகிறது நெற் தண்டுகள் பொன்நிறமாக மாறுகின்றது. வயல் கிராமம் செழிப்பால் மலர்கிறது.


17. சத்தத்தை குறிப்பிடுவதற்கு பாவிக்கப்பட்ட சொல்

1) ஒலி 2) மலர்கிறது 3) தாலாட்டுகிறது

18. கிராமத்தை செழிப்பாக்குவது

1) மனதின் காற்று 2) குருவிகளின் ஒலி 3) வயல்

19. கீழ்வரும் உருவில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை எத்தனை?



1) 9

2) 12

3) 8

www.lkedu.lk

20. லீப் ஆண்டு அல்லாத ஒரு வருடத்திலே பெப்ரவரி 1ம் திகதி திங்கட்கிழமை எனின், இவ்வருடத்தில் ஏப்ரல் 1ம் திகதி என்ன கிழமை ஆகும்?

1) வியாழக்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) திங்கட்கிழமை

- **கீழ்வரும் இல 21 மற்றும் 22 களில் ஒரே வகைக்குள் உள்ளடங்காத விடைகளின் கீழ் கோடிடுக.**

21. தேனீ, மைனா, தேன்பறவை, பருந்து, ஆடு, காகம், பூனை

1) தேன்பறவை 2) பருந்து 3) தேனி


22. ழ, இ, க, உ, ச, எ, ய, ப, ஒ

1) இ, எ, ஒ 2) ழ, ப, ச 3) ழ, உ, ய

23. உரோம இலக்கங்கள் i - xx வரையான எண்களை எழுதும் போது ஈர்க்கு துண்டுகள், நான்கினைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய எண்களின் எண்ணிக்கை

1) 4 2) 5 3) 6

24. இதனை சதுரமாக உருவாக்குவதற்கு இன்னும் சேர்க்க வேண்டிய கட்டங்கள் குறைந்தபட்சம் எத்தனை தேவை?



1) 10
2) 8
3) 15

25. பெட்டிக்குள் காணப்படும் எண்களின் பெறுமதியினை உருவாக்கத் தக்க விடையினைத் தெரிவு செய்க.

16 + [4 + 3] = 23

1) 18 ÷ 3 2) 27 ÷ 3 3) 21 ÷ 3

26. 30 + [62 - 44] = 58

1) 4 x 7 2) 4 x 8 3) 9 x 2

www.lkedu.lk

27. 100 யை நூறு சமபகுதிகளாக பிரித்து அதன் அரைவாசியுடன் 10 இனைக் கூட்டும் போது கிடைக்கும் விடை

1) 60 2) 80 3) 90

28.

7	3	2
4	9	6

இங்கு குறிப்பிட்டுள்ள ஒற்றை இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

1) 12 2) 19 3) 29

29. கயிற்றுக் கொடியொன்றில் மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களிலான கொடிகள் ஒழுங்காக தொங்கவிடப்பட்டுள்ளது எனின் அங்கு 25 வதாக காணப்படும் கொடியின் நிறம் என்ன?

1) மஞ்சள் 2) சிவப்பு 3) நீலம்

30. ஒரு பக்க 6cm நீளமான சற்சதுரம் ஒன்றினை முக்கோணமாக ஆக்கினால் அவ் முக்கோணத்தின் ஒரு பக்க நீளம் யாது?

1) 6cm 2) 7cm 3) 8cm

31. என்னிடம் உள்ள பேனாக்களில் ஒன்றைத் தவிர மற்றைய ஏனைய பேனாக்கள் நீலநிறமாகும். ஒன்று தவிர மற்றையவை சிவப்பு ஆகும். ஒன்று தவிர ஏனையவை கறுப்பு ஆகும். என்னிடம் உள்ள பேனைக-ளின் எண்ணிக்கை

1) 2 2) 3 3) 6

32. இன்று வியாழக்கிழமை எனின், முந்தநாளிற்கு முதல் நாளுக்கு முதல் நாள் என்ன கிழமை?

1) ஞாயிறு 2) திங்கட்கிழமை 3) சனிக்கிழமை

33. காலை 7.00 மணிக்கு நான் பாடசாலைக்கு செல்லும் போது எனது நிழல் எனது வலது பக்கமாக விழுந்தது எனின் நான் பயணம் செய்த திசை

1) வடக்கு 2) தெற்கு 3) மேற்கு

34. வைத்தியர் வாட்டு எனின் ஆசிரியர்

1) பாடசாலை 2) வகுப்பு 3) சிற்றுண்டிச்சாலை

35. சித்திராவின் அக்காவிற்கு சகோதரர்கள் இருவர் மற்றும் சகோதரிகள் மூவர் உள்ளனர் எனின் சித்திராவிற்கு உள்ள சகோதரிகள் எத்தனை?

1) 3 2) 4 3) 5

www.ikedu.lk

36. நகரிலே எப்போதுமே காணப்படுவது,

1) வாகனங்கள் 2) கட்டடங்கள் 3) ஆட்கள்

37. முந்தநாள் மே மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை எனின், நாளை மறுநாள் தினம் மற்றும் நாள் என்ன?

1) மே மாதம் 9 வெள்ளிக்கிழமை

2) மே மாதம் 10 செவ்வாய்க்கிழமை

3) மே மாதம் 11 திங்கட்கிழமை

38. பஸ் வண்டி 03 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களிற்கு ஒருமுறை பாடசாலைக்கு அருகாக செல்லும். மு.ப 6.00 க்கு முதலாவது தடவை பஸ்வண்டி பாடசாலைக்கு அருகாக செல்லுமாயின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகள் பஸ்வண்டி வரும் நேரம் முறையே,

1) மு.ப 9.30 மற்றும் பி.ப 1.00

2) மு.ப 10.30 மற்றும் பி.ப 1.00

3) பி.ப 12.30 மற்றும் பி.ப 4.00

39. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நூற்றாண்டு மற்றும் தசாப்தம் ஆவது

1) 20 ம் நூற்றாண்டு 4 வது தசாப்தம்

2) 19 ம் நூற்றாண்டு 5 வது தசாப்தம்

3) 20ம் நூற்றாண்டு ஐந்தாவது தசாப்தம்

40. சமராவின் வயது அவனது தந்தையின் வயதின் ½ ஆகும். இருவரினது வயதுகளின் வித்தியாசம் சமராவின் வயதின் இரண்டு மடங்காவது எத்தனை வருடங்களின் பின் ஆகும்.

1) 10 2) 20 3) அவ்வாறு இல்லை





வினாத்தாள் இல - 01 - பத்திரம் II

01. *கீழே தரப்பட்டுள்ள பந்தியை நன்றாக வாசித்து வினவப்பட்டுள்ள கேள்விகளிற்கு விடை தருக.*

பசிந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை வேளையில் வீட்டிற்கு அருகிலுள்ள மைதானத்திற்கு செல்லுவான். அந்த மைதானத்தை சுற்றி மா, கொய்யா, ரம்புட்டான் மரங்கள் உள்ளன. அவை மைதானத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு அரண்போல காணப்படும். குருவிகள், குரங்குகள், அணில்கள் அவ் பழமரங்களில் பழுத்த மாம்பழம், கொய்யா, ஜம்பு, ரம்புட்டான் பழங்கள் உண்பதற்காக வழக்க மாகவே இருக்கின்றன. மாலை 3 மணியாகும் போது அரித்த, உத்துள, மாலிக் மற்றும் ஆதவன் ஆகி யோர் மைதானத்திற்கு வருவார்கள். எல்லோரும் ஒற்றுமையாக பந்தயம் கட்டி விளையாடுவார்கள், உயரம் பாய்வார்கள், கிரிக்கெட் ஆடுவார்கள்.

i) *இங்கு குறிப்பிடப்படும் சகலரும் ஒன்றுகூடும் இடம் எது?* .....

ii) *பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானம் யாது?*.....

iii) *பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் அடைமொழிச் சொற்களை எழுதுக.*

.....

iv) *நிகழ்கால ஒருமை வினைச் சொல்லினைத் தெரிவு செய்து எழுதுக.*

.....

v) *படர்க்கை பன்மை பெயர்ச்சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.*

.....

vi) *குறில் எழுத்து உள்ள சொற்களை எழுதுக.*

.....

02. *கீழ்வரும் சொற்களின் ஒத்தகருத்து சொற்களை எழுதுக.*

1) *வனம்* .....

2) *பிரபலம்* .....

03. *தரப்பட்டுள்ள சொற்களை பொருத்தமான அர்த்தமுள்ள வாக்கியமாக எழுதுக.*

வழக்கமாக / ஆக / அவர் / உழைக்கிறார் / பாதுகாப்பிற்கு / பிள்ளைகளின்

.....

04. *பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழி நடையில் எழுதுக.*

i) *பெருமழைக்கு தோட்டத்து மரமெல்லாம் நிலத்தில் விழுந்தது.*

.....

ii) *நீதிபதி விளையாட்டு வீரர்களிற்கு அறிவுரை சொன்னார்*

.....

www.lkedu.lk

05. வழுவற்ற சொல்லின் கீழ் கோடிடுக

i) நிழல் / நிளல்

ii) பதில் / பதிள்

06. பொருத்தமான நிறுத்தற் குறிகளைப் பிரயேகித்து வாக்கியத்தை திருப்பி எழுதுக.

i) விபத்து என்றால் நாமும் போவோம்

ii) சேவகி இந்த நிலத்திலுள்ள எண்ணெய் விதைகளை பொறுக்கி பாதுகாப்பாக வைக்கவும்

07. கீழே தரப்பட்டுள்ள இணைமொழிகளைப் பூரணப்படுத்துக.

i) ..... குழை

ii) மேள .....

08. கீழ்வரும் மரபுத்தொடர்களின் கருத்தை எழுதுக.

i) தலை கவிழ்தல் .....

ii) அறக்கப் பறக்க .....

09. கீழேயுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.

i) அம்மா தம்பிக்கு காற்சட்டை தைத்தது. ( )

ii) இரவு வானில் நட்சத்திரங்கள் மின்னின. ( )

iii) அவன் தாளத்திற்கேற்ப கை தட்டுகிறார். ( )

10. பின்வரும் விடுகதைக்கு விடை தருக.

மரத்தில் மலராத பூ .....

11. பின்வரும் ஆங்கில சொல்லிற்கு பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக.

Rainbow .....

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியத்தில் இடைவெளிக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

Who ..... (is / are) this ?

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஆங்கில மொழிகளில் கூறும் விதமாக ஆங்கில எழுத்துக்களால் எழுதுக.

i) புதுவருட வாழ்த்துக்கள் .....

ii) நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் .....

14. i) 'அதிபர்' என்னும் சிங்களச் சொல்லிற்குரிய சிங்கள சொல்லை எழுதுக. .....

ii) கீழேயுள்ள தமிழ் வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் வித்தினை தமிழில் எழுத்துக்களில் எழுதுக.
மாணவர்கள் வருவார்களா? .....


www.lkedu.lk

15. 8099 என்னும் எண்ணிற்கு அடுத்த எண்ணை எழுத்தில் எழுதுக. .....

16. பின்வரும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக.


4072, 4007, 4773, 4702

17. கீழேயுள்ள மாம்பழக் குவியலில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கையினை உரோமன் எண்ணில் எழுதுக.



.....

18. i) இந்த உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியினை தசம இலக்கத்தில் எழுதுக.



.....

ii) நிறந்தீட்டப்படாத பகுதியை பின்னத்தில் எழுதுக.

19. பாடசாலை விளையாட்டு விழா மணி 8.30 க்கு ஆரம்பமாகி மணி 14.15 க்கு நிறைவு பெற்றது. இவ் விளையாட்டு விழா நடைபெற்ற காலம் எவ்வளவு?

.....

20. நண்பர்கள் மூவர் ஒருவருக்கு ரூபா 200/= வீதம், பணம் சேர்த்து விளையாட்டு உபகரணங்கள் வாங்கினார்கள். அவ் உபகரணங்களிற்கு செலவளித்த பணம் ரூபா 468.00 ஆகும். எனின் மிகுதிப் பணத்தை மூவரும் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்கு கிடைக்கும் பணம் யாது?

.....

21. பொலித்தின் பொதி ஒன்றினுள் 275 சொக்கிலேட்களும், காட்போட் பெட்டியொன்றில் 125 சொக்கிலேட்களும் உள்ளன. இந்த சொக்கலட் முழுவதையும் ஒவ்வொன்றிலும் 5 வீதம், பார்சல் பண்ணப்பட்டது. அவ்வாறெனின் பண்ணப்பட்ட பாசல்களின் எண்ணிக்கை எத்தனை?

.....

22. பிள்ளை ஒருவர் "P" என்ற இடத்திலிருந்து 5M கிழக்கு திசை நோக்கி பயணம் செய்தார். பின்னர் அவ்விடத்திலிருந்து 5m தூரம் வடக்கு திசையாக பிராயணம் செய்து "Q" என்னும் இடத்தில் நின்றார். இதன் பிரகாரம் "Q" என்ற இடம் "P" என்ற இடத்திலிருந்து எந்த திசையில் அமைந்துள்ளது?


.....

www.kedu.lk

23. 1ℓ 500mℓ பழரச போத்தல் ஒன்றிலிருந்து 300mℓ அளவுள்ள 04 குவளைகளை நிரப்பினால் போத்தலில் எஞ்சியுள்ள பழரசத்தின் அளவு யாது?

.....

24. தரப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் அட்டவணையிலுள்ள இடைவெளியை நிரப்புக.



இருந்து	வரை	தூரம் km
A	D	90
C	D	25
C	B	.....
B	A	35

25. பின்வரும் விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

பொருள்	அளவு	விலை ரூ	சத
கலர்பெட்டி	1	95	00
அழிறப்பர்	1	20	00
கம் போத்தல்	1	50	00


கலர்பெட்டி ஒன்று, அழிறப்பர் ஒன்று கொள்வனவு செய்த அமில் கடைக்காரிடம் 3 நோட்டுக்களைக் கொடுத்த போது அவர் மிகுதிப்பணத்தை அமில் க்கு கொடுத்தார். அமில் க்கு கடைக்காரர் கொடுத்த மிகுப்பணம் எவ்வளவு?

.....

26. பாடசாலையில் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கையை விட ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 275 ஆல் அதிகமாகும். ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1270 எனில், பாடசாலையிலுள்ள மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

.....

27. பின்வரும் பென்சில்கள் இரண்டினதும் நீளங்களின் கூட்டுத் தொகை யாது?




.....

www.lkedu.lk

28. வகுப்பிலே உள்ள மாணவர்களுள் $\frac{5}{8}$ பகுதியினர் கணிதத்திற்கு 75 க்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 75 க்கு குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் 12 பேர் எனின், வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை?

.....

29. கீழே தரப்பட்டுள்ளது வகுப்பிலுள்ள மாணவர்கள் விரும்பும் பலகாரங்கள் தொடர்பான விபர மாகும். அதை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.



பலகார வகை	....
முறுக்கு	.....
அலுவா	10
குக்கீஸ்	12
பயித்தம் உருண்டை	4

i) குக்கிஸ் சாப்பிட ஆசைப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் குறித்து காட்டுக.

ii) முறுக்கு சாப்பிட ஆசைப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அட்டவணையில் குறிப்பிடுக.

iii) வகுப்பிலுள்ள பிள்ளைகளின் $\frac{1}{3}$ அளவான மாணவர்களை விரும்பும் பலகாரம் வகை எது?

.....

30. "எனது மனநிம்மதியை வீட்டிலுள்ளாருடன் பகிர்ந்து கொள்கின்றேன்" இந்த வாக்கியமானது

1) மனவுறுதி
2) உதிர்ப்பு
3) பிரார்த்தனை

31. "மனிகே மஹே ஹித்தே" என்ற புகழ் பெற்ற பாடலை பாடி அரச விருது பெற்ற பாடகர் யார்?

1) லதா வலபொல
2) யொகானி டி சில்வா
3) ஜவோ டெனிஸ்

32. "ஸ்ரீ விக்ரம் சர்வ சித்தி" என்னும் பெயரில் மூன்று பிரதேசங்களுக்கும் அரசனாக கிரீடம் தாங்கிய மன்னன்?

1) மொனரவில ஹப்பிட்டிலபொல
2) கொங்கவே கொட பன்டா
3) வீரபுரன் அப்பு

www.ikeau.lk

33. கோலமிடும் வழக்கத்தை உடையவர்கள்

1) முஸ்லிம் 2) ஆதிவாசிகள் 3) தமிழர்கள்

34. தமது வீட்டுத் தோட்டத்தில் மரம் நாட்டுவதால் கிடைக்கும் நன்மை அல்லாதது?

1) மண் வளமற்றதாகும்.

2) பூக்கள், பழவகைகள் பெறுதல்.

3) சுத்தமான காற்று கிடைக்கும்.

35. நவீன கடைகளில் இடம்பெறும் இலத்திரனியல் பணப்பரிமாற்ற முறை அல்லாதது எது?

1) கடன் அட்டை மூலம்

2) டெபிற் அட்டை மூலம்

3) காசோலை மூலம்

36. பலகையை மட்டப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவது

1) ஆணி 2) சீவுளி 3) அரம்

37. மாத விளைச்சலாகும் பயிர்,

1) பாவற்காய் 2) பருப்பு 3) பூசணிக்காய்

38. பாதுகாப்பற்ற பிரதேசமாக கருதப்படுவது

1) மண்சரிவு ஏற்படும் இடம்.

2) சுரங்கப் பாதையால் பயணம் செய்வது.

3) மஞ்சள் கோட்டினால் பாதையை கடப்பது.

39. ஐஸ் கட்டிகள் இரண்டினை ஒன்றாக அருகில் சில நிமிடங்கள் வைத்திருந்த போது அந்த ஐஸ் கட்டிகள் இரண்டும்

1) ஒன்றாக ஒட்டிக்கொள்ளும்.

2) வைத்திருந்தது போலவே வேறுவேறாக இருக்கும்.

3) மிக வேகமாக உருகும்.

40. தொற்றா நோயாகக் கருதப்படுவது

1) கொலரா 2) கொரோனா 3) உயர் இரத்த அழுத்தம்


41. உபகரணத்தில் உள்ளகமாக பற் சில்லு காணப்படக் கூடிய உபகரணமாவது

1) திசைகாட்டி 2) துவிச்சக்கர வண்டி 3) கடிகாரம்

42. நீர் ஊற்றுக்களைப் பாதுகாக்கும் தாவரம்

1) பயினஸ் 2) மருது 3) கயிட்ரில்லா

43. இந்த உருவிலே காணப்படுவது



1) மட்பாண்ட வடிவமைப்பு

2) பண்டைய கலைப்படைப்பு

3) தாவரவகை வடிவமைப்பு

www.lkedu.lk

44. நுளம்பால், எலியால், குரங்கால் தொற்றக்கூடிய நோய்களை முறையே உள்ளடக்கியுள்ள விடை

1) டெங்கு, வயிற்றுப்போக்கு, சிரங்கு

2) டெங்கு, எலிக்காய்ச்சல், நீர் வெறுப்பு நோய்

3) ஆணைக்கால்நோய், செங்கண்மாரி, வயிற்றோட்டம்


45. COVID - 19 நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு அத்தியாவசியமாக பின்பற்ற வேண்டியது

1) வீட்டிற்கு உள்ளே தனிமையாக இருத்தல்.

2) பொருத்தமான உணவைத் தெரிவு செய்தல்.

3) முகக் கவசம் அணிதல்.

46. உருவின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயமாவது



1) உடைந்த எச்சங்களை போட வேண்டாம்.

2) குப்பைத் தொட்டிகளில் போட வேண்டாம்.

3) தொட வேண்டாம்.

47. ஒரே மாகாணத்தில் கடலில் விழும் நதிகள் இரண்டு எவை?

1) வலவை, மகாவலி 2) மகாவலி, களுகங்கை 3) களனி, களுகங்கை

48. உருவின் மூலம் குறிப்பிடப்படுவது



1) மின் காந்தம்

2) சட்டக்காந்தம்

3) சாதாரண காந்தம்

49. கொரோனா தொற்றுநோய் வருகையுடன் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் குறைவடைய நேரிட்டது. வீழ்ச்சியடைந்த கல்வி நடவடிக்கையினை மீளக் கட்டியெழுப்ப இணையம் பாவிக்கப்பட்டது. அத்தகைய பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

1) வட்ஸ்அப் 2) ஈமெயில் 3) பேஸ்புக்

50. மின் மற்றும் மின்னியல் பொருள் அல்லாதது

1) கைத்தொலைபேசி 2) CFL மின்குமிழ் 3) பிளாஸ்ரிக்

51. அவசர கலந்துரையாடல் தொடர்பாக பிரிவுத்தலைமை ஆசிரியரினை அழைப்பதற்கு அதிபரிற்கு அவசியம் ஏற்பட்டது. அப்போது அவர் பின்பற்ற கூடிய தொடர்பாடல் முறை

1) தொலைபேசி அழைப்பு வழங்குதல்.

2) மாணவர் தலைவர் ஊடாக செய்தி அனுப்புதல்.

3) ஒலி பெருக்கி மூலம் அழைப்பு விடுத்தல்.

52. இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு

1) மலேசியா 2) ஆபிரிக்கா 3) இந்தியா

www.lkeduuk

53. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்

1) W.D. அமரதேவ 2) ஆனந்த குமாரசுவாமி 3) ஆனந்த சமரக்கேன்

54. உடனடி ஆகாரம் (Past food) உண்பதால் ஏற்படத்தக்க நோய்

1) அதிக உடற்பருமன் 2) வயிற்றோட்டம் 3) செங்கண்மாலை

55. அவசர அம்புலன்ஸ் (நோயாளர் காவு வண்டி) சேவைக்கு அழைக்க வேண்டிய எண்

1) 1990 2) 1999 3) 1970

56. நள்ளிரவிற்கு சமீபமாக மலர்ந்து மீண்டும் காலையில் வாடும் பூ

1) தாமரை 2) கடுப்புல் 3) மல்லிகை

57. தாவரங்கள் நன்றாக வளரக்கூடியது

1) செம்மண் 2) மணல்மண் 3) களிமண்

58. வீதி போக்குவரத்து ஒலிச்சமிக்கையில் (சிக்னல்) உள்ள வர்ணங்கள் மேலிருந்து கீழாக ஒழுங்கில்,

1) மஞ்சள், பச்சை, சிவப்பு

2) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை

3) பச்சை, செம்மஞ்சள், சிவப்பு

59. மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்படும் சுவையான உணவுப்பொருளைத் தரும் உயிரினம்

1) தேனீ 2) ஆடு 3) கோழி

60. "மனித நடவடிக்கைகளால் அழிந்துபோகும் வனவளம்" என்னும் தலைப்பினாலான வாக்கியங்கள் 3 எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாததாக அமைதல் வேண்டும். எழுவாய், பயனிலை, வழு, சொற்பிழை, எழுத்துப்பிழைகளின்றி எழுதப்படல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.ikedu.lk